**<u>சுருக்கம்</u>**

தேனி அல்லிநகரம் – பாதாள சாக்கடைத் திட்டம் – நிலம் கையகப்படுத்துதல் – நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை**

**அரசு ஆணை(நிலை) எண்:91** **நாள்: 14 .05. 2010**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (2ப) எண். 237, ந.நி(ம) கு.வ துறை, நாள். 11.12.2007
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.1131/2010/ பாசாதி1, நாள்.11.03.2010.

––––

**<u>ஆணை:-</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.34.75 கோடியில் தேனி அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட நகராட்சிப் பகுதியில் அரசு நிலம் ஏதும் கிடைக்காத காரணத்தினால் நகர எல்லையில் அல்லி நகரம் கிராமத்தை சார்ந்த தனியாருக்கு சொந்தமான சர்வே எண். 107–ல் 3.81 ஏக்கர் இடத்தினை கிரயமாக பெற தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்காணும் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. இதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சித் தலைவரை மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தை மூலம் நிலம் எடுப்பு செய்து தரவேண்டியதில், 11.02.2010 அன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு கூட்டத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது குறித்து, நிலத்தின் உரிமையாளர் திரு. சுப்பிரமணியராஜா அவர்களிடம் அரசு நிர்ணயம் செய்துள்ள விலை தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், மேற்படியார் தன்னுடைய நிலத்திற்கு (சர்வே எண்.107ல் 3.81 ஏக்கர்) ஏக்கர் ஒன்றிற்கு சுமார் ரூ.11.00 இலட்சம் தரும்படி கோரியுள்ளார் என்றும், அரசு விதிகளின்படி மாதிரி சந்தை மதிப்பு அல்லது கையகப்படுத்தப்படவுள்ள நிலத்தின் வழிகாட்டிப் பதிவேட்டின் மதிப்பு இவற்றில் எது குறைவோ, அம்மதிப்பில் 150 சதவிகிதம் மட்டுமே அதிகபட்சமாக வழங்கப்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டு, அதன்படி அரசு நிர்ணயம் செய்துள்ள நிலமதிப்பான ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4,65,000/– இன் 150 சதவிகித மதிப்பான ரூ.6,97,500/–ஐ பெற்றுக் கொண்டு அன்னாருக்கு பாத்தியப்பட்ட புல எண். 107ல் உள்ள 3.81 ஏக்கர் நிலத்தினை தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு தனிப்பட்ட பேச்சுவார்த்தையின் மூலம் விற்பனை செய்ய நிலத்தின் உரிமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் எனவே அத்தொகையை செலுத்த ஒப்புக்கொண்டதாகவும் அதன்படி கையகப்படுத்தப்படவுள்ள 3.81 ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ.26,57,475/– என குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தேனி அல்லிநகரம் மாவட்ட ஆட்சித்தலைவர் இத்திட்டத்தினை செயல்படுத்த தகுதிவாய்ந்த புன்செய் நிலங்கள் அருகில் இல்லை என சான்று அளித்துள்ளதாகவும் இதன்பேரில் நில உரிமையாளரும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தனக்கு சொந்தமான தேனி மாவட்டம், அல்லிநகரம் கிராமத்தில் சர்வே எண். 107ல் அமையும் 3 ஏக்கர் 81 செண்ட் இடத்தினை அரசால் நிர்ணயிக்கப்படும் உயர்ந்த பட்ச தொகைக்கு கிரையம் வழங்க சம்மதித்து திரு.என்.ஆர். சுப்பிரமணியராஜா 17.09.2009 அன்று சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தீர்மான எண். 1299, நாள். 29.10.2009ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

4. எனவே, தேனி—அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த கழிவுநீரகற்று சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு 3.81 ஏக்கர் நிலத்திற்கு நேரடி பேச்சு மூலமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4,65,000/— +50 சதவிகிதம் (அதாவது ரூ.2,32,500/— + ரூ.4,65,000/— = ரூ.6,97,500/— ) வீதம் 3.81 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு ரூ.26,57,475/— னை மாவட்ட தனிப்பேரப்பேச்சு குழுவால் நிர்ணயம் செய்யப்பட்டும், நில உரிமைதாரரும் கிரயத்திற்கு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளதாலும் சர்வே எண்.107—ல் 3.81 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திட அனுமதி வழங்குமாறு பரிந்துரை செய்து தக்க ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, தேனி—அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட கழிவுநீரகற்று சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு சர்வே எண். 107ல் 3.81 ஏக்கர் நிலத்தை, நில உரிமைதாரருக்கு நிலத்தின் மதிப்பு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.6,97,500/— வீதம் ரூ.26,57,475/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தி, தனிப்பேரப்பேச்சு மூலம் (through private negotiation) கையகப்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை—600 0 05.
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி.
ஆணையர், தேனி—அல்லிநகரம் நகராட்சி, தேனி.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், சென்னை — 600 017.

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை— 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை — 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( அந.2) துறை, சென்னை— 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.